**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.எண்.751/2022**

**வழக்கு சாட்சி DW.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருண்குமார் | தொழில் | : தனியார் கட்டுமான தொழில் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : ஓடைப்பட்டி | வயது | : சுமார் 32 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 05.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

பூர்விக சொத்துக்களை ரூ.23,50,000 தொகைக்கு 3-ம் பிரதிவாதி விற்று தொகையினை ரொக்கமாக பெற்றுக்கொண்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பணத்தினை தனது தாயாரும் வாதிகளுக்கு அடுத்த சினேகிதியான தாயார் ஈஸ்வரி பெயரில் ஒட்டன்சத்திரம் பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு எண்.825610110003609ல் 3-ம் பிரதிவாதி தொகையினை வைப்பீடு செய்துள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு பின்பு 3-ம் பிரதிவாதி அவருடைய தாயாரான ஈஸ்வரி என்பவரின் வங்கி கணக்கில் இருந்து ரொக்கமாகவும், காசோலை வழியாகவும், இலட்சக் கணக்கில் தொகை பெற்று வந்தார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. ஈஸ்வரி என்பவரின் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்துள்ளதை பார்த்துள்ளேன் என்றால் ? ஆமாம். பார்த்துள்ளேன். தாயார் ஈஸ்வரியின் வங்கி கணக்கில் இருந்து எடுத்த பணத்தை வைத்து 3-ம் பிரதிவாதி ஒட்டன்சத்திரம் கிராமம், சர்வே எண்.278/1எ என்ற பிளாட் எண்.30எ-ல் 861 சதுரடி மனையிடத்தை 27.07.2010ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் ? அது பற்றி எனக்கு

தெரியாது. 31.05.2011–ம் தேதி 3–ம் பிரதிவாதி வா.சா.ஆ.7 ஆவணத்தின் வழியாக வழக்குச் சொத்துக்களில் ஒரு பகுதியை கிரையம் பெற்றார் என்றால் ? ஆமாம். வா.சா.ஆ.6ன் வழியாக கிரையம் பெற்ற மனையிடத்தை 3–ம் பிரதிவாதி 30.01.2012–ம் தேதி வா.சா.ஆ.9 பரிவர்த்தனை பத்திரத்தின் வழியாக மனையிடத்தை ராமசாமி மகன் ராஜா என்பவருக்கு கொடுத்து ராஜா என்பவர் வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்தில் ஒரு பகுதியை கிரையம் பெற்ற சொத்தை பெற்றுக் கொண்டார் என்றால் ? ஆமாம். அதனால் தாவா சொத்துக்கள் 3–ம் பிரதிவாதிக்கும் அவருடைய மைனர் குழந்தைகளான வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? இல்லை. 3–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு சர்வே எண்.130/2எ5–ல் ஒரு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தார் என்றால் ? சரிதான். அந்த ஆழ்துளை குழாய் கிணற்றிற்கு 3–ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு எண்.387 என்ற எண்ணில் மின் இணைப்பு பெற்றார் என்றால் ? எனக்கு தெரியாது. அந்த மின் இணைப்பில் இருந்து ஆழ்துளை குழாய் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீரை எடுத்து சுத்திகரித்து பொதுமக்களுக்கு வியாபரா ரீதியில் குடீநீர் விநியோகம் செய்ய முயற்சி மேற்கொண்டார் என்றால் ? ஆமாம். தேவையான நிதி வசம் 3–ம் பிரதிவாதியிடம் இல்லாத காரணத்தினால் இடையன்வலசு நாச்சிமுத்து மனைவி பரமேஷ்வரி என்பவரின் மூலம் ரூ.11,00,000 கடன் பெற்றுக் கொண்டு கடன் பொறுப்பிற்காக பி.வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை பரமேஷ்வரிக்கு 3–ம் பிரதிவாதி மலரணையாக எழுதிக்கொடுத்தார் என்றால் ? கடன் எதற்காக வாங்கினார் என்று தெரியாது. எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். குடிநீர் பிளாண்ட் அமைப்பதற்கு போதுமானதொகை இல்லாததால் அவர் ஒட்டன்சத்திரம் வட்டம், வெரியப்பூர் கிராமம், வெள்ளையகவுண்டன் புதுார், ரெங்கசாமி மகன் செல்வராஜ் என்பவரிடம் ரூ.4,50,000 கடன் பெற்றுக்கொண்டு அதற்கு பி.வா.சா.ஆ.8 கிரைய ஒப்பந்த பத்திரம் தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து எழுதிக் கொடுத்தார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அந்த

தொகையும் போதுமானதாக இல்லாததால் வெரியப்பூர் கிராமம் சென்னியப்பகவுண்டர் மகன் சென்னியப்பன் என்பவரிடம் ரூ.4,00,000 கடன் பெற்றுக் கொண்டு அதற்கு பி.வா.சா.ஆ.10 தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து கிரைய உடன்படிக்கை எழுதிக் கொடுத்தாரா என்றால் ? கிரைய உடன்படிக்கை எழுதிக் கொடுத்த விபரம் தெரியும். ஆனால் எதற்காக எழுதிக் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி தொகைகள் எதுவும் போதுமானதாக இல்லாததால் எனது தகப்பனாரிடம் ரூ.25,00,000 கடன் கேட்டதில் அவர் வழக்கு சொத்துக்கள் முழுவதையும் எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் கிரையம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன் என்றால் ? அது தவறு. எனது தகப்பனாருக்கு பல இலட்சக்கணக்கில் தொகை வட்டிக்கு கொடுத்து பணம் பெறுவது தொழில் என்றால் ? இல்லை. எனது தகப்பனார் யாருக்கும் கடன் கொடுத்தது இல்லையா என்றால் ? இல்லை. எனது தகப்பனார் கொடுத்த கடன் ரூ.25,00,000 வைத்துதான் பரமேஷ்வரிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தையும், மற்ற இரண்டு கிரைய ஒப்பந்தங்களையும் 3–ம் பிரதிவாதி ரத்து செய்து பரமேஷ்வரி கிரையம் ரத்து செய்த அதே தேதியில் எனக்கு கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் ? அது தவறு. நான் கிரையத்திற்கு பேசி ரொக்க பணம் கொடுத்து வாங்கியது ஆகும். அந்த பணத்தை வைத்து இரண்டு கிரைய ஒப்பந்த பத்திரங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் ? நான் கொடுத்த பணத்தினை வைத்து ரத்து செய்யப்பட்டது. எனது தாயாருக்கு 14.03.2014–ம் தேதி பி.வா.சா.ஆ–13–ன் படி ஒரு பகுதி சொத்தினை கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் ? கிரையம் செய்தது உண்மை. எனக்கும் எனது தாயாருக்கும் 3–ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த இரு கிரைய ஆவணங்களும் 3–ம் பிரதிவாதியின் தகப்பனாரிடம் பெற்ற கடன் தொகைக்கு பொறுப்பிற்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் ? அது தவறு. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் குடிநீர் சுத்தரிக்ரிப்பு ஆலையான கட்டிடத்திற்குள் இருப்பது பற்றியும், உயர் மதிப்பிலான

இயந்திரங்கள் இருப்பதையும் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு வரைபடம், புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எங்களது தரப்பில் எந்தவித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். குடிநீர் சுத்திகரிப்பு ஆலையை வியாபார ரீதியாக தண்ணீரை சுத்திகரித்து விற்பனை செய்ய கூடாது என்று பழனி கோட்டாட்சியர் ஆலையை மூடி சீல் வைத்தார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 18.03.2025ம் தேதியில் நான் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியத்தில் 3−ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், நாளது வரை அதே வீட்டில் 3−ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் ? சரிதான். நாங்கள் எழுதி வாங்கிய கிரையம் கடன் பொறுப்பிற்காக எழுதப்பட்டதால் வழக்கு சொத்தில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் இயந்திரங்களை பற்றி எங்கள் கிரைய ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் ? கிரைய ஆவணத்தில் குறிப்பிடவில்லை. குடியிருப்பு வீட்டை நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் விவசாய சாலை என்று எழுதி உள்ளது என்றால் ? ஆமாம். குடியிருப்பு வீடாக இருந்து 3−ம் பிரதிவாதியும் அவரது குடும்பஉறுப்பினர்களும் குடியிருந்து வரக்கூடிய நிலையில் நான் கிரையம் பெற்ற இரண்டு மாதகாலதத்திற்குள் அதை எவ்வாறு வீடாக மாற்றி கட்டினேன் என்றால் ? 3−ம் பிரதிவாதி தற்காலிகமாக அந்த இடத்திற்கு கிழக்கில் மாறிவிட்டார்கள். அதற்கு பிறகு நான் வேலை பார்த்தேன். நான் வேலை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் நான் அந்த வீட்டினை பூட்டி எனது சுவாதீனத்தில் வைத்து கொள்ளாமல் மீண்டும் எதற்காக 3−ம் பிரதிவாதியையும், அவரது குடும்பத்தார்களையும் அனுமதித்தேன் என்றால் ? தண்ணீர் சுத்திகரிப்பு பிளாண்டுகளை மாற்ற வேண்டும் என்றும், அதற்கு இடம் இல்லாததால் குடியிருக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதனால் மாற்றினேன். கடந்த

2014–ம் ஆண்டு வீட்டினை பராமரித்து நான் 3–ம் பிரதிவாதியையும் அவரது குடும்பத்தாரையும் குடியிருக்க அனுமதித்துள்ள நிலையில் நாளது வரை சுத்திகரிப்பு ஆலையில் உள்ள இயந்திரங்கள் அப்புறப்படுத்தவில்லை, வீட்டையும் காலி செய்து கொடுக்கவில்லை என்றால் ? ஊர் பெரியவர்களை வைத்து பேசினோம். அதனால் சட்டவடிக்கை எடுக்கவில்லையா என்றால் ? ஆமாம். 2019–ம் ஆண்டு வழக்கு போட்டுவிட்டார்கள். வீட்டிற்கு மின் இணைப்பு எண்.363 என்ற மின் இணைப்பானது எந்த பகிர்மானத்தில், எந்த Tariff ல் வாங்கியுள்ளது என்றால் ? எனக்கு நினைவில் இல்லை. அந்த மின் இணைப்பானது Commercial L.M. II என்ற இணைப்பில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. நான் கட்டுமான தொழில் செய்து வரக்கூடிய நிலையில் குடியிருந்து வரும் வீட்டிற்கு எந்தவகையான மின் இணைப்பு பெறப்படும் என்றால் ? குடியிருப்புக்கான மின் இணைப்பு பெறப்படும். வியாபார ரீதியலிான மின் இணைப்பு பெறப்படாது. 3–ம் பிரதிவாதி குடியிருந்து வரும் வழக்கு சொத்திற்குள் செங்கள் சூலை நடத்தி வந்ததால் அதற்கு தண்ணீர் தேவை என்பதால் மேற்படி மின் இணைப்பினை வியாபார ரீதியில் பெற்றுள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. நாளது வரை 3–ம் பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டிற்கு மின்கட்டணத்தை 3–ம் பிரதிவாதி செலுத்திவருவதால் 3–ம் பிரதிவாதி தான் மின் இணைப்பு ரசீதுகளை வைத்துள்ள காரணத்தினால் தான் என்னால் நீதிமன்றத்தில் ஒரு ரசீதை கூட தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் ? சரியல்ல. அது தவறு. நான் மின் கட்டணம் கட்டாத காரணத்தினால் தான் என்னிடம் ஒரு ரசீது கூட இல்லை என்றால் ? சரியல்ல. நானும், எனது தகப்பனாரும், எனது தாயார் அனைவரும் சேர்ந்து அடியாட்களுடன் வழக்கு சொத்திற்குள் நுழைந்து 12.02.2018–ம் தேதி வீட்டை பூட்டி அதில் குடியிருந்த 3–ம் பிரதிவாதியின் குடும்பத்தை வெளியேற்றவும், தாவா சொத்தில் இருந்து அவர்களை காலிசெய்யவும் கலகம் ஏற்படுத்தினோம் என்றால் ? இல்லை. எனது பெயரிலும், எனது பெற்றோர்கள்

பெயரிலும் கள்ளிமந்தையம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண்.73/2018 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ? பொய்யான புகார் ஆகும். 3–ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளின் பெயர்களில் எழுதப்பட்ட கிரைய ஆவணங்கள் படி பெற்ற கடன் தொகையினை பல தேதிகளில் திருப்பி செலுத்திய நிலையில் கிரைய ஆவணங்களை ரத்து செய்து கொடுக்க 3–ம் பிரதிவாதி பழனிச்சாமியிடம் கேட்டதில் அதற்கு மேற்படி வட்டிக்காக தொகை ரூ.10,00,000 செலுத்தினால் மட்டுமே கிரைய ஆவணங்களை ரத்து செய்ய முடியும் என்று கூறினார் என்றால் ? அது தவறு. பழனிச்சாமி என்பவர் எனது தகப்பனார் ஆவார். வேறு வழியின்றி 3–ம் பிரதிவாதி அவரது தாயாரின் வங்கி கணக்கில் இருந்து 11.01.2019ம் தேதி ரூ.10,00,000 தொகையினை வங்கி பரிவர்த்தனை வழியாக எனது தகப்பனார் கணக்கு வைத்துள்ள HDFC வங்கி கணக்கு எண்.50200026693108 என்ற கணக்கிற்கு பணத்தை மாற்றியுள்ளார் என்றால் ? பணம் மாற்றப்பட்டது உண்மை எனது தகப்பனார் மாட்டு தீவணம் வியாபாரம் செய்து வந்தார். 3–ம் பிரதிவாதியும் அவரது தாயாரான ஈஸ்வரியும் மாட்டுபண்ணைக்கு மாட்டு தீவனம் எடுத்த வகையில் கொடுக்க வேண்டிய பணத்தை தான் மாற்றிவிட்டார். மாட்டுப்பண்ணை எங்கு நடந்தது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரத்தை 3–ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளநிலையில் மேற்படி சங்கதிகளை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளோமா என்றால் ? எனக்கு தெரியவில்லை. எனது வழக்குரைஞுரை தான் கேட்கவேண்டும். கிரையமானது கடன் பொறுப்புக்காக தான் எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதால் குடியிருப்பு வீடு, சுத்திகரிப்பு ஆலை கட்டிடம் மற்றும் சொத்தின் அடி நிலம் எதுவும் எங்களுக்கு சுவாதீனம் கொடுக்கவில்லை என்றால் ? அது தவறு. 3–ம் பிரதிவாதி குடியிருப்பு வீட்டில் உள்ள மின் இணைப்பை தவறான முறையில் பயன்படுத்தியதால் 3–ம் பிரதிவாதிக்கு அபராத தொகை விதிக்கப்பட்டு, 3–ம் பிரதிவாதி அபதாரத்தை செலுத்தி மீண்டும் மின் இணைப்பு பெற்றுள்ளார்

என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவங்கள் கிரைய ஆவணம் ஏற்படுத்திய பிறகு நடைபெற்றது என்றால் ? எனக்கு தெரியாது. சொத்தினை கிரையம் பெற்றுள்ள நிலையில் வீட்டிற்கான மின் இணைப்பை எனது பெயரில் மாற்றவில்லை என்றால் ? மாற்றவில்லை. கிரையத்திற்கு பிறகு வழக்கு சொத்திற்கான பட்டாவை வருவாய்து துறையினர் எங்களது பெயரில் மாற்றியதற்கு பட்டா பதிவு சட்டத்தின் கீழ் 3-ம் பிரதிவாதிக்கு அறவிப்பு அனுப்பி அவருடைய ஆட்சேபனை கேட்கப்பட்டதா என்றால் ? அறவிப்பானது 2015-ம் ஆண்டுஅனுப்பப்பட்டது. நான் சொல்வது பொய் என்றாலும், வருவாய்துறை அலுவலகத்தில் மனு கொடுத்து ரகசியமாக பெயர் மாற்றிக் கொண்டோம் என்றால் ? சரியல்ல. நானும், எனது தாயாரும் பெற்ற கிரையம் இல்லா மற்றும் செல்லா நிலையது என்றால் ? அது தவறு. தாவாவில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.05 16:26:41 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்